2012ல் நம்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. மதுரையில் செல்லூர் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இன்னும் நிலநடுக்கம் 6 இடங்களில் பாதிக்க போவதாக தகவல்கள் உள்ளன.

கல்குவாரிகளை அரசு விதியின்படி மட்டுமே நடத்தவேண்டும். இயற்கை மீள் உருவாக்கும் செய்து கொள்ளும் வகையில் தான் அறிவியல் பூர்வமாக கனிமங்கள் எடுக்கப்பட வேண்டும். கனிம குவாரிகள் அவ்வாறு செயல்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். எந்த கல்குவாரியும் மரங்கள் நடவில்லை.

மேலும் கல்குவாரி காலை 7 மணி முதல் 5 மணி வரை மட்டுமே இயங்க வேண்டும்.மேலும் 1886 வெடிமருந்து சட்டப்படி, மதியம் 1.00 மணி முதல்

2.00 வரை மட்டுமே வெடி வைக்க வேண்டுமென்ற விதிகளும் எங்கும் பின்பற்றப்படுவது இல்லை. நானல் வெடி வெடிக்க வேண்டும் என்பதும், வெடிமருந்து சப்ளை செய்பவரிடம் வந்துள்ள நாணல் வெடிகள் எவ்வளவு – அதை எங்கிருந்து பெற்றார் – யாருக்கு கொடுத்தார் என்பதை ஆய்வு செய்தாலே உண்மைகள் வெளி வந்துவிடும். உண்மையில் இந்தப் பகுதியில் இயங்கிய, இயங்கிக் கொண்டுள்ள எந்த குவாரியும் இவ்வாறு வெடி வைக்கும் முறையை பின்பற்றுவது இல்லை என்பது தான் உண்மை.

தற்போது ஈரோடு மாவட்டத்தில், ஒவ்வொரு குவாரியும், நானல்வெடி வாங்கும் ரசீதை TNPCBக்கு ஒப்படைக் வேண்டும் என உத்தரவிடப்பட்டு உள்ளது. மதுரையிலும் அதை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். வெடி வைக்கும் போது அதிர்வை கவனிக்க நிலநடுக்க கருவி வைத்து பரிசோதிக்கப்படும் என அறிக்கையில் உள்ளது. ஆனால் நடைமுறையில் அவ்வாறு செய்யாததால், பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகிறது.

குவாரி இயங்கத் தொடங்கும் போது அமைக்கப்பட வேண்டிய கம்பி வேலி, எல்லைய காட்டும் கற்கள் என்பது எல்லாம் சட்டத்தில் உள்ளதே தவிர நடைமுறையில் இல்லை. கல்குவாரிகளில் கம்பி வேலி அமைக்கப்படாதால் கடந்த ஏப்ரல் மாதம் 2023ல் திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை பகுதியில் ஒரு கல்லூரி மாணவரும், கடந்த ஆண்டு ஜீன் மாதம் 1ம் தேதி விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனம் அருகே மூடப்பட்ட கல்குவாரியில் 5 பெண்கள் இறந்துள்ளனர். சென்ற மாதம் ஈரோடு மாவட்டம் அந்தியூர் தவிட்டுப்பாளையத்தில் மூன்று சிறுவர்கள் குவாரியில் மூழ்கி இறந்தனர்.

புதிய கல்குவாரிகள் தொழிலாளர் நலன் பேணுவதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஆனால் இயங்கிக் கொண்டுள்ள மற்றும் ஏற்கனவே இயங்கிய எந்த

குவாரியிலும் பணிபுரியும் எந்த தொழிலாளர்களுக்கும் இஎஸ்ஐ/பி.எப்/ இன்சூரன்ஸ் உட்பட எந்தவித உரிமைகளும் இதுவரை வழங்கப்படவில்லை.

நெல்லை, அடைமிதிப்பான் குளத்தில் சட்ட விரோதமான கல்குவாரியில் விபத்தில் இறந்தவர்களுக்கு கூட தமிழக அரசு தான் 25 லட்சம் இழப்பீடு வழங்கியது. சட்டப்படியான எந்தவித இழப்பீடும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. காற்று மூன்று மாதம் தொடர்ந்து ஆய்வு செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மூன்று மாதம் ஆய்வு செய்த போதும் மின்சாரம் எடுத்து பயன்படுத்தப்படும் வீடுகள் பற்றிய விபரம் கொடுக்கப்படுவதில்லை. வருங்காலத்தில் இது கொடுக்கப்பட வேண்டும்.

காரணம் காற்றாய்வுக்கு மின்சாரம் பயன்படுத்தும் பொழுது அந்த ஆய்வு செய்வதற்காக மின்சாரம் எடுத்த இடத்தின் மின் கட்டணம் அந்த குறிப்பிட்ட மாதங்களில் உயர்ந்திருக்கும். அப்பொழுது உண்மையில் ஆய்வு நடந்ததை அறிய முடியும். இந்த திட்ட அறிக்கை தயாரித்த நிறுவனம் ஆய்வுகள் எதுவும் எடுக்காமலேயே, ஆய்வுக்கூடங்களில் பரிசோதனை செய்ததாக போலியான லேப் ரிப்போட்களை கொடுத்து ஏமாற்றி அது தொடர்பான பல்வேறு புகார் வழக்குகள் நிலுவையில் உள்ளதையும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம் என கூறினார்.

ஆங்கில பத்திரிக்கையில் குவாரி கருத்து கேட்புக்கூட்டம் தமிழ்நாடு முழுவதும் விளம்பரம் செய்ய இரண்டு லட்சம் ரூபாய் வரை அரசு செலவு செய்கிறது. ஆனால் வரும் காலத்தில் கருத்து கேட்புக் கூட்டம் பற்றிய செய்தியை, 2000 ரூபாய் செலவு செய்தாலே 10 கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள கிராமங்களுக்கு சுவரொட்டி அச்சிட்டு ஒட்டி விட முடியும்.

கடந்த மாதம் 28.02.2023 திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம் பரப்பலாறு அணைக்கு மணல் குவாரிக்கு, சில மாதம் முன்பு மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கச்சிராயன்பட்டி ராஜேஷ் கல்குவாரி கருத்துக் கேட்பு கூட்டத்திற்காக பாதிக்கப்படக்கூடிய 10 கிலோமீட்டர் சுற்றளவு அனைத்து பகுதிகளிலும் சுவரொட்டி ஒட்டி விளம்பரம் செய்திருந்தார்கள். தற்போது முழுமையாக அவ்வாறு இல்லாமல் உள்ளது. வருங்காலத்தில் மாவட்டத்தில் அவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும். நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவராக உ. சகாயம் இ.ஆப அவர்கள் இருந்த பொழுது, பல்வேறு கருத்து கேட்டு கூட்டங்களுக்கு அறிவிப்பு இவ்வாறு சுவரொட்டி ஒட்டப்பட்டு இருந்தது. இங்கும் வருங்காலத்தில் நடக்கும் அனைத்து கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கும் அவ்வாறு செய்யப்பட வேண்டும்.

சமூக பொருளாதார சூழல் என்பதில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு மட்டும் உள்ளது. 10 கிலோமீட்டர் சுற்றியுள்ள கிராமங்களில் மக்களுக்கு இந்த குவாரி இயங்கத் தொடங்கும் முன்பு பாதித்துள்ள நோய் பற்றிய முழுமையாக ஆய்வு செய்து விபரம் கொடுக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். அப்பொழுதுதான் ஐந்தாண்டு காலம் குவாரி இயங்கி முடியும்போது அங்குள்ள அனைத்து மக்களின் உடல்நிலை பற்றி உண்மை நிலையயை அறிய முடியும்.

இந்த அறிக்கையில் காற்று, மண், நீர், ஒலி ஆய்வு செய்யப்பட்ட லேப் ரிப்போர்ட் முழுமையாக எதுவும் காட்டப்படவில்லை. குவாரி உரிமையாளர்கள் தங்களது அபிடவிட்டில் தெரிவித்துள்ளபடி, தவறான தகவல்களை தெரிந்தோ அல்லது மறைத்து தனது அறிக்கையில் தெரிவித்திருந்தால் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படாது, அப்படி அனுமதி வழங்கப்பட்டு இருந்தாலும் அந்த தொழில் முனைவோர் தனது சொந்தச் செலவில் அந்தத் திட்டத்தை அகற்றிக் கொள்ள வேண்டும் என தெரிவித்து

உள்ளனர். அந்த அடிப்படையில் இந்த கல்குவாரிக்கு கொடுக்கப்பட்டுள்ள அனுமதியை ரத்து செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

நாங்கள் கல் குவாரி அமைப்பதற்கு எதிரானவர்கள் அல்ல சட்ட விரோதமாக செயல்படும் கல் குவாரிகளுக்கு மட்டுமே எதிரானவர்கள். இங்கே பல குவாரிகளை இயக்கிக் கொண்டிருப்பவர்கள், ஏற்கனவே இயக்கியவர்கள், ஏற்கனவே இயக்கி தற்போது புதிய அனுமதி கேட்டிருப்பவர்கள் ஒருவராவது நாங்கள் சட்டப்படி செயல்படுகிறோம் என்பதை தெரிவித்தால் அவர்களுக்கு நாங்கள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம் என கூறினார்.

<u>2.திரு. காராமணி, உசிலம்பட்டி</u>

இங்கு அதிகமாக பெண்கள்தான் வந்துள்ளார்கள். எதற்கு வந்துள்ளார்கள் என்று தெரியமாலேயே வந்துள்ளார்கள். உங்கள் நிலங்கள் சூரையாடப்படுகிறது. ஒரு கல்குவாரி அருகே நல்லமலப்பட்டி வெள்ளையத்தேவர் தோட்டம் உள்ளது. அந்த தோட்டம் விவசாயம் இல்லாமல் தரிசாக உள்ளது. எத்தனை அடி கீழே தோண்ட போகிறார்கள் என்று எந்த அதிகாரியும் இங்கு கூறவில்லை. 20 அடிக்கும் மேலே தோண்டி இங்கு கல்குவாரியில் சிறுவர்கள் குளிக்க சென்றால் இறந்து விடுகிறார்கள். எதற்காக நீங்கள் இங்கு கருத்து சொல்ல வந்துள்ளளீர்கள். 100 ரூபாய், 200 ரூபாய் கொடுத்தால் வந்து விடுகிறீர்கள். உங்கள் நிலம் பாதியில் கத்திரியும், பாதியில் வெண்டைக்காயும் விளைவித்து வாழ்வதை விடுத்து பெரிய முதலாளிகள் பணம் சம்பாதிக்கிறார்கள். காசு கொடுத்து கூப்பிட்டால் வந்து விடுகிறீர்கள். நிலத்தை 2000 ரூபாய்க்கு வாங்கி விடுகிறார்கள். அதில் கல்குவாரி அமைத்து வேட்டு போடுகிறார்கள். இதனால் ரோட்டில் சைக்கிளில் செல்பவர் மீது கல் விழுந்து இறந்து விடுகிறார்கள். நல்ல தண்ணீர் குடிக்க முடியவில்லை. இப்படி பல காரணங்களினால் விவசாயிகள்

பாதிக்கப்படுகிறீர்கள். இன்னும் 10 வருடங்களில் நீங்கள் அரிசி சாப்பிட முடியாது. ரேஷன் கடையில் 3 மாத்திரைகள் கொடுப்பார்கள் அதை வரிசையில் நின்று வாங்கி 3 வேளையும் சாப்பிட்டு தூங்க போகிறீர்கள். இந்த அரசு நிச்சயமாக விவசாயம் பண்ண விடமாட்டார்கள். முதலாளிக்கு தான் இந்த அரசு துணையாக உள்ளது. நிச்சயமாக நீங்கள் மாத்திரை தான் சாப்பிடுவீர்கள். 60 வருடம் ஆயுட்காலம் ஆனால் நீங்கள் 20 வருடத்தில் இறந்துவிடப் போகிறீர்கள்.

தினம் ஒரு திட்டத்தை தீட்டி இந்த அரசாங்கம் தினம் ஒரு குழி தோண்டி எம் சாண்ட் போடுகிறார்கள். பணக்கார்களுக்கு விற்கிறார்கள். அந்த பணக்காரர்கள் மாடிமாடியாக கட்டி ஒரு ரூம் 20,000 வரை வாடகைக்கு விடுகிறார்கள். 200 ரூபாய்க்கு நீங்கள் கருத்து சொல்ல வந்துள்ளீர்கள். நீங்கள் நல்லது பண்ண இங்கு வரவில்லை. நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்.

40 வகை ஆவணம் இந்த அரசின் Mines Department கணிணியில் பதிவேற்றம் செய்யப்படவில்லை. இங்கு அருகில் ஒரு குவாரி செயல்படுகிறது. 10 ஏக்கர் நிலம் இங்கு பாழ்பட்டு தரிசாக உள்ளது. ஏனென்றால் அங்கு வேட்டு போட்டு தூசிகளால் பூச்செடிகள் வீணாகப் போய்விட்டது. என்ன விவசாயம் செய்ய அனுமதித்தீர்கள். பொன்னமங்கலம் நல்ல ஊர். நம் 10 ஏக்கர் நிலத்தை வாங்கி கனிம வளத்தை பயன்படுத்தி அந்த கல்லை அள்ளி யாருக்கு கொடுப்பார்கள். உங்களுக்கு 35 ரூபாய் கொடுத்திருப்பார்கள். ஆனால் 35 கோடி சம்பாதிக்கிறார்கள். எதற்கு கருத்து சொல்ல வந்தீர்கள். இவ்வளவு பேர் கையெழுத்து போட்டதால் இவர்களுக்கு குவாரி அமைக்க சம்மதம் என்று. என்ன விவசாயம் செய்ய போகிறீர்கள். நீங்கள் வேறு எங்காவது வேலைக்கு செல்கிறீர்களா. எந்த அலுவலகத்திற்கும் இல்லை. தோட்டத்தில் கத்திரிக்காய் விளைவிக்க கூலி

வேலைக்கு சென்றால் நல்ல காசு கிடைக்கும். நன்றாக சாப்பிடலாம். இப்படி விவசாயத்தை அழித்துக் கொண்டு போனால் நிச்சயம் மாத்திரை சாப்பிடும் காலம் வரும். இந்த கல்குவாரிக்கு நிச்சயமாக நீங்கள் அனுமதி கொடுக்காதீர்கள். அனுமதி கொடுத்தால் நீங்கள் தோட்டம் வைத்திருக்க முடியாது. சோலார் போட்டு கரண்டு எடுக்கிறார்கள். காற்றாடி அமைத்து கரண்ட் எடுக்கிறார்கள். நீங்கள் என்ன செய்ய முடியும். பணக்காரர்களிடம் காசு இருக்கிறது. நூறாண்டு காலமாக நம் முன்னோர்கள் அனுபவித்த சொத்தை விடுவதற்கு தான் நீங்கள் கருத்து சொல்ல வந்துள்ளீர்கள்.

40 வகை ஆவணம் உள்ளதா?. உங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா?. 40 வகை ஆவணம் கனிமவிதியின்படி உங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு இந்த மக்களுக்கு ஏதாவது கொடுத்துள்ளீர்களா? இல்லை. 40 வகை ஆவணத்தை கொடுத்து விட்டு கூட்டம் நடத்துங்கள். 5ஆவது படித்த பெண் கூட ஆவணத்தில் உள்ள குறைகளை கண்டறிவார்கள். இந்த கிராம சாலையில் 60 டன் லாரியை கொண்டு செல்கிறார்கள். இந்த ரோடு 60 டன்னை தாங்குமா? சாலைகள் குண்டும் குழியுமாக இருக்கிறது. இங்கு பைக்கில் செல்பவர்கள் போக முடியாது. பல கஷ்டத்தில் ஒரு பெண் உடல்நிலை சரியில்லாமல் போனால் அந்த ரோடு பயன்படாது. அதிகாரிகள் அந்த உள்நோக்கத்தோடு செயல்பட்டால் இதே மக்களை கூட்டி மிகப்பெரிய போராட்டம் நடத்தி கல்குவாரியை மூட வைப்போம் என்பதை உறுதியாகவும், உன்னதமாகவும் கூறுகிறேன். தயவுசெய்து இந்த திருஞானசம்பந்தம் கல்குவாரி செயல்பட கூடாது என்று கூறினார். 40வகை ஆவணங்களை வாங்கி பொதுமக்களுக்கு எதற்காக கூட்டம் நடத்துகிறோம் என்று அவர்களுக்கு தெரியப்படுத்தி நீங்கள் இந்த கல்குவாரி கூட்டத்தை நடத்துங்கள். இதுதான்

சிறந்தது. அதற்கு பிறகும் இந்த மக்கள் அனுமதி கொடுத்தால் நீங்கள் இதற்கு அனுமதி கொடுங்கள். ( காராமணி, ஆரியப்பட்டி, உசிலம்பட்டி)

**3.திருமதி.சந்திரா, ஆலம்பட்டி**

நான் பி.காம் படித்துள்ளேன். நான் கல் உடைக்கும் தொழிலாளியின் மகள். எனக்கு 40 வயதாகிறது. 2 குழந்தைகள் உள்ளார்கள். ஆனால் என் அம்மா அப்பா இந்த வேலை செய்துதான் எங்களை படிக்க வைத்தார்கள். எங்களை வளர்த்தார்கள். இதே திடியன்மலையில்தான் கல் உடைத்தார்கள். இப்பொழுது எத்தனையோ பெஷிலிட்டீஸ் வந்துவிட்டது என்றார்கள். பாறை அங்கு இருந்தால், குடிசை இங்கு இருக்கும். இந்த குடிசையில்தான் எங்களை தொட்டிகட்டி போட்டு வளர்த்தார்கள். அப்பொழுதெல்லாம் பறந்து வரும் வெடி வெடித்தார்கள். அப்பொழுதெல்லாம் எந்த விஞ்ஞானமும் கிடையாது. அதில்தான் நாங்கள் வளர்ந்தோம். இப்பொழுது சாகும் வரை இந்த கல் உடைக்கும் வேலை செய்துதான் படிக்க வைத்து வளர்த்தார்கள். இந்த ஆதங்கத்தில்தான் நான் பேசுகிறேன்.

நான் நேற்று ஆலம்பட்டி கூட்டத்தில் பேசினேன். எதற்காக என்றால் எனக்கு யாரும் காசு கொடுக்கவில்லை. என்னை யாரும் கூப்பிட்டும் வரவில்லை. ஆலம்பட்டியில் என் குடும்பம் ஏன் ஒரு சமூகம் என் சொந்தங்கள் அனைவரும் அதில் வேலை செய்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் கல் உடைப்பதைத் தவிர வேறு வேலை தெரியாது. இப்பொழுதும் என் அம்மா கல் உடைத்துதான் உங்களை படிக்க வைத்தேன் என்று கூறுவார்கள்.அந்த வேலை தெரிந்தவர்கள் வேறு என்ன செய்வார்கள். இதைத் தவிர வேறு வேலை தெரியாது. நான் படித்துள்ளேன் என்னால் ஆபீஸ் வேலைக்கு செல்ல முடியவில்லையே. யார் கவர்மென்ட் வேலை கொடுப்பது?.

இப்பொழுது அய்யா சொன்னார்கள். கல் உடைப்பதை நிறுத்துங்கள். சரி நிறுத்துகிறோம். ரோடு யார் போடுவார்கள். கவர்மென்ட் ரோடு கவர்மென்ட் தான் போடுவார்கள். மண்ணை குவித்து ஆலம்பட்டியில் 4வழிச்சாலை போடுகிறார்கள். ஒரு மழை வந்தால் அமுங்கி விடுகிறது. அப்பொழுது கவர்மென்ட்க்கு தான் நஷ்டம், மண்ணை குவித்து உயரமாக ரோடு போட்டால் 2 மழைக்கும், ஹெவி வெகிக்கிள் செல்லும் போது அமுங்கி விடுகிறது. மறுபடியும் ஒரு ரோடு போடுகிறார்கள். எல்லாத் தொழிலும் தேவைதான்.

இப்பொழுது கல்குவாரியை மூடிவிட்டால், விவசாயத்தையும் மூடி விடுங்கள். விவசாயமும் கெமிக்கல் தானே? என் ஊரில் நடப்பதை, என் கருத்தை பேச விடுங்கள். என் ஊரில் விவசாயமே கிடையாது. வானம் பார்த்த பூமி. அங்கு கல் உடைத்துதான் பிழைக்கிறார்கள். அருகில் மில் உள்ளது. குவாரியை நிறுத்திவிட்டார்கள். சாப்பாட்டிற்கே வழியில்லாமல் உள்ளது ஒரு ஊரே. படித்தவர்கள் மில் வேலைக்கு செல்கிறார்கள்.

நான் படித்தவள்தான். நானும் மில் வேலைக்கு சென்றுள்ளேன். விவசாய வேலைக்கும் சென்றுள்ளேன். Foreign Machine வைத்துள்ளார்கள். படித்த எனக்கே ஒன்றும் புரியவில்லை. படிக்காதவர்கள் எப்படி மில் வேலைக்கு செல்வார்கள். அவர்கள் எப்படி வாழ்வார்கள். நான் யாருக்கும் எதிராளி இல்லை. இப்படி ஒரு கூட்டம் உள்ளது. இவர்களுக்கு இந்த அரசாங்கம் தான் பதில் சொல்ல வேண்டும். அண்ணன் சொன்ன மாதிரி குவாரியை மூடிவிட்டால் இவர்கள் எப்படி வாழ்வார்கள். சட்ட திட்டங்களுக்குட்பட்டும், மக்களுக்கும் விவசாய நிலங்களுக்கும் பாதுகாப்பாக உள்ள குவாரிக்கு அனுமதி கொடுங்கள். பாதிக்கப்படும் இடத்தில் அவர்களும் கொடுக்க போவதில்லை.

இந்த பாட்டியிடம் கேட்ட போது குவாரியினால் எந்த பாதிப்பும் இல்லை என்று கூறினார்கள். நான் பிரச்சனைக்கு வரவில்லை. இது அரசியல் கூட்டம் இல்லை. எதார்த்தத்தை தான் பேசுகிறேன். ஒரு ஊர் மக்கள் இதை நம்பி தான் வாழ்கிறார்கள். எங்கள் ஊரில் ரோடு தான் பிரச்சனை. எங்களுக்கு ரோடு மட்டும் போட்டு கொடுங்கள். என் ஊரில் விவசாயம் நிலம் இல்லை ராயபாளையம் ரோடு மட்டும் போட்டு தாருங்கள் எங்கள் ஊரில் குவாரி அமைப்பதால் எந்த பிரச்சனையும் இல்லை. எங்கள் ஊர் மக்களுக்கு இது தேவை. எல்லோரும் குழந்தைகளை வைத்து கொண்டு கஷ்டப்படுகிறார்கள். ஒரு குடும்பம் கஷ்டப்படுவதை என்னால் பார்க்க முடியவில்லை. நானும் ஒரு சமூக ஆர்வலர்தான். நான் எந்த பிரச்சனைக்கும் வரவில்லை

<u>**வருவாய் கோட்டாட்சியர், திருமங்கலம்**</u>

ரோடு மட்டும் போட்டு தர வேண்டுமா. சரி போடுகிறோம் என கூறினார்.

<u>**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மதுரை**</u>

அடுத்து பேசுபவர்கள் தங்களது உரிமைகளை பேசலாம். அடுத்தவர் பேசும் பொழுது சண்டை போட வேண்டாம் என கூறினார்.

<u>**4.கலைசெல்வன், உசிலம்பட்டி**</u>

சகோதரியின் ஆதங்கமும், வருத்தமும் புரிகிறது. இந்த தொழிலை தவிர வேறு தொழில் எங்களுக்கு தெரியாது என்று கூறினார். அதை அரசிடம் முறையிட்டு வேறு வேலை கேட்க வேண்டும். ரோடு போடுவதில் ஒரு விதி உள்ளது. இதில் வரும் பணத்தை என்ன செய்வீர்கள் என்றால் ரோடு போட என கூறுகிறார்கள். ஏன், தமிழக அரசு ரோடு போடமாட்டார்கள்.

நமக்கு தேவையான சாலையை தமிழக அரசிடம் தான் கோரிக்கையாக வைத்துப் பெற வேண்டும். இவர்கள் போடுவார்கள் அதைவைத்து தான் வாழ முடியும் என்பதில்லை. உள்ளூர் தேவைகளை நிறைவேற்றி கொள்ளுங்கள்.

சகோதரி கூறினார்கள் இந்த ஊரில் வேலை இல்லை. இந்த குவாரி நன்றாக தான் உள்ளது. ஒரு விவசாயி கேட்கிறார். இதை தடுத்தால் கிணறு வெட்டுவதையும் தடுப்பீர்கள் என்று, கிணற்றிற்கு போடும் வெடி, சிறு வெடி இது பாதிக்காது. இவர்கள் செய்வது கனரக வெடி ஆழத்தில் வெடிப்பார்கள். அரசு அனுமதி கொடுத்து விடுகிறது. 99% குவாரிகள் முறையாக நடத்தவில்லை. எங்கள் ஊரில் பாதிப்பில்லை. இதை வைத்து தான் படித்தோம் என்பது நன்றாக தான் உள்ளது.

எங்கள் குலதொழில் கள்ளச்சாராயம் காய்ச்சுவது. ஆனால் இப்பொழுது அந்த தொழில் செய்ய முடியுமா. இந்த காலத்தில் தொழிலை மாற்றி வேறு தொழில் செய்கிறோம். இதை மட்டும் வைத்து மாபெரும் தவறுக்கு வழி வகுக்க கூடாது. நீரின் தன்மை மாறி விடும். வரும் வழியில் பொட்டல்காடு தான் உள்ளது. தண்ணீர் இல்லை என்றால் என்ன செய்வது. ஊரின் அடையாளம் மாறிவிடும். யாரோ ஒருவர் பணம் சம்பாதிக்க. நாம் துணை போக கூடாது. சட்டப்படி 40 ஆவணங்களை பதிவேற்றம் செய்யுங்கள் நியாய மாக இருந்தால் அனுமதி கொடுங்கள் என கூறினார்.

<u>5.திரு. செல்வராஜ், கம்பூர், மேலூர்</u>

எனது பெயர் செல்வராஜ். எனது பெற்றோரும் கல்குவாரியில் வேலை பார்த்துதான் என்னை படிக்க வைத்தார்கள். நானும் கல்குவாரியில் வேலை பார்த்தேன். கல் உடைத்தேன். லோடு ஏற்றியிருக்கிறேன். இறக்கியிருக்கிறேன். நான் டிகிரி முடித்து அரசுப்பணியில் இருந்தேன்.

அதற்கும் முன்னால் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்தேன். அரசுப்பணி கூட்டுறவுத் துறையில் கிடைத்தது. கூட்டுறவுத்துறையில் சென்னையில் வேலை கொடுத்தார்கள். ஆனால் எனக்கு கிராமத்திற்காக வேலை செய்ய வேண்டும் என்று சின்ன வயதிலிருந்து ஆசை. சென்னையிலிருந்து வந்து போக முடியவில்லை. எனவே வேலையை விட்டு விட்டு 2017ல் ஜல்லிக்கட்டு போராட்டத்தில் கலந்து கொண்டதிலிருந்து எனக்கு ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டு நம் கிராமங்களுக்காக வேலை செய்ய வேண்டும். மக்களுக்காக வேலை செய்கிறோம். இதற்காக ஆனந்த விகடனால் 2022ம் ஆண்டு விருது கொடுத்திருக்கிறார்கள். இது உட்பட பல விருதுகளை வாங்கியிருக்கிறேன்.

எங்களது நோக்கம் கல்குவாரி வரக்கூடாது என்பது கிடையாது. மக்களோட பிழைப்பை கெடுக்க வேண்டும். மக்கள் பசியாக இருக்க வைக்கனும், பட்டினி போட வேண்டும் என்பது இல்லை. மக்கள் நல்லாயிருக்க வேண்டும். கல்குவாரி வேணுமா? வேண்டாமா? வாக்கெடுப்பு இங்கு நடத்தவில்லை. அதிகாரிகளுக்கு நன்றாக தெரியும். 100 பேர் ஆதரவு சொல்லிவிட்டு 20 பேர் எதிர்ப்பு தெரிவித்தால் கல்குவாரி வந்துவிடும் என்று இல்லை. அதே போல் குவாரி வரக்கூடாது என்று 100 பேர் சொல்லிவிட்டு 20 பேர் வரணும்னு சொன்னால் வராது என்றும் இல்லை.

ஆனால் சுற்றுச்சூழல் துறை எதைப் பார்க்கும் என்றால் அரசு விதி சட்டம். இங்கு நாம் பசியாய் இருந்து செத்து போனாலும் அரசாங்கம். அரசு விதியை மீறி இருந்தால் பார்க்காது. இந்த குவாரி அரசு விதிமுறைக்குட்பட்டு அனுமதி கொடுக்கலாமா? வேண்டாமா? என்பது தான். எனக்கு வேலை இல்லை என்று சொன்னால் அதற்கு காரணம் அரசாங்கத்தின் மற்றொரு துறையிடம் கோரிக்கை வைக்கனும். நமது அரசாங்கம் என்ன செய்கிறது என்றால் குறிப்பாக வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு குறிப்பாக 1

முதல் 14 வயது வரை இலவசக் கல்வி கொடுக்கிறார்கள். அதனால் படிக்க வேண்டும் என்றால் நிறைய திட்டம் உள்ளது.

அதிலும் பெண்கல்விக்கு அதிக முக்கியத்துவம் உள்ளது. பெண்களுக்கு 20% இடஒதுக்கீடு உள்ளது. அவர்கள் படிக்கனும்னு நினைத்தால் போதும். அதைவிட்டு நான் ஏழை, பணக்காரன் இந்த கல்குவாரியை வைத்து தான் படிக்க வேண்டும் என்று இல்லை. நான் மிகவும் கஷ்டபப்பட்டு படித்தேன். அதற்கு கல்குவாரி தான் காரணம் என்று சொல்ல முடியாது. அரசு நமக்கு செய்த சலுகைகள். பல தலைவர்கள் போராடி பெற்றுத் தந்த உரிமைகள் தான் நம்மை படிக்க வைத்து விழிப்புணர்வு கொண்டு வந்துள்ளது. வேலை வாய்ப்பு, அரசாங்கம் இதெல்லாம் ஊராட்சியின் வரவு செலவு கணக்கு என்று ஒரு இணையதளம் இருக்கிறது. நாங்கள் அதை தொடர்ந்து கண்காணித்து கொண்டு வருகிறோம்.மொத்தம் 12,524 பஞ்சாயத்து இருக்கிறது. உங்கள் பஞ்சாயத்தில் என்னென்ன திட்டங்கள் வந்திருக்கிறது. அதற்கு எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள் என்று, இதை ஒரு 10 வருடத்திற்கு எடுத்து பாருங்கள்.

அரசாங்கம் பணம் ஒதுக்காமல் இல்லை. கிட்டதட்ட ஒரு பஞ்சாயத்துக்கு குறைந்தபட்சம் 5 கோடி ரூபாய் 5 வருடத்திற்கு ஒரு முறை வருகிறது. மக்கள் தொகை அடிப்படையில் வேறுபடலாம். மாநில அரசு எவ்வளவு நிதி ஒதுக்குகிறார்கள். மத்திய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம் என்று குறைந்த பட்சம் ஒரு ஊருக்கு 100 நாள் வேலைவழங்க வேண்டும். எத்தனை பேர் இதை வாங்கியிருக்கிறீர்கள். எத்தனைப் பேருக்குத் தெரியும் 100 நாள் வேலை நினைத்தால் நடத்துவது இல்லையென்றால் விடுவது கிடையாது. கட்டாயம் 100 நாள் வேலை கொடுத்தே ஆக வேண்டும் என்று சட்டத்தில் சட்டமாக இயற்றி இருக்கிறார்கள்.

உங்களுக்கு வேலை கொடுக்கவில்லையென்றால் அரசாங்கத்தை எதிர்த்து கேள்வி கேட்கலாம். வழக்கு தொடரலாம். எனக்கு 100 நாள் வேலை கொடுக்கவில்லை முழு சம்பளம் கொடுக்கவில்லை என்று எவ்வளவோ விஷயங்கள் நமது பொருளாதார மேம்பாட்டுக்காகவும், நல்வாழ்வுக்காகவும் அரசாங்கம் பணம் செலவழிக்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கும் அரசு அதிகாரிகள் அதனை சரியாக பின்தொடருவது இல்லை. இங்கே இருக்கிற மக்களுக்கும் அதைப்பற்றிய விழிப்புணர்வு இல்லை. நம்ம வீட்டுக்கு வரும் பணம் எவ்வளவு முக்கியமோ, அதுபோல ஊருக்கு வரும் பணம் முக்கியம் என்று நினைப்பதில்லை. எத்தனை பேர் கிராம சபையில் பேசியிருப்போம். கிராம சபை என்றால் என்ன என்று எத்தனை பேருக்குத் தெரியும்.

சட்டமன்றம், நாடாளுமன்றம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கிராமத்திலுள்ள கிராம சபை நல்லது கெட்டது அனைத்தும் பேசப்படவேண்டும். எத்தனை ஊரில் கிராம சபை கூட்டம் நடக்கிறது. கிராம சபை கூட்டம் நடந்தால் மட்டுமே அதுவும் சரியாக நடந்தால் மட்டுமே கிராமங்கள் வளர்ச்சியை நோக்கி பயணிக்க முடியும். ,இதைத்தான் காந்திஜி சொல்லியிருக்கிறார். கிராம பஞ்சாயத்து ராஜ் சட்டம் என்று ஒன்று 1983ல் இருந்து நடக்கிறது.

எங்கள் ஊரில் கிராம சபை தொடர்ச்சியாக நடக்க என்னாலான முயற்சிகளை செய்துள்ளோம். கடந்த 5 வருடமாக தொடர்ந்து கூட்டம் நடைபெற வைத்துள்ளோம். மக்களை கலந்து கொள்ள வைத்துள்ளோம். அவர்கள் வேலை, வசதி வாய்ப்புகளைப் பற்றி பேச வைத்துள்ளோம். இதன் மூலம் எங்களது பஞ்சாயத்து இந்தியா அளவில் பேசப்படுகின்ற பஞ்சாயத்து ஆக மாறியுள்ளது.

இந்த மாதிரி விஷயங்களில் கிராமங்களில் உள்ள படித்த இளைஞர்கள் முன் வர வேண்டும். தங்கச்சி சொன்னார், நான் ஒரு சமூக ஆர்வலர் என்று, மிகவும் சந்தோஷம். அவர் இதுபோன்ற விஷயங்களில் கவனம் செலுத்தினால் நாங்கள் அதை வரவேற்போம். கல்குவாரி வேண்டாம் என்று சொல்லவில்லை. மக்களை பாதிக்கக்கூடாது. இப்பூமியை பாலைவனமாக மாற்றக்கூடாது. இந்த அச்சத்தினால் தான் சட்டத்திற்குட்பட்டு நடந்தால் சரி ஆதரிக்கிறோம். சகாயம் என்று ஒரு கலெக்டர் கடவுள் போல வந்து இந்த விஷயத்தை கையில் எடுக்கவில்லையென்றால் கிட்ட தட்ட மேலூர் பகுதி எல்லாம் அழிந்திருக்கும்.

எங்கள் பகுதியில் இப்போது நிலத்தடி நீர் மட்டம் இந்தியாவிலேயே மிகவும் ஆபத்தான பகுதி என்று ஒரு சர்வே சொல்லியிருக்கிறார்கள். நீரில்லாமல் ஒரு ஊரில் இருக்கலாமா? சோறும், நீரும் ரொம்ப முக்கியம். அதன் பிறகு தான் மற்ற விஷயம் எல்லாம். அந்த 2 விஷயத்திலும் பாதிப்பு வரக்கூடாது என்றுதான் சமூக ஆர்வலர்கள் மெனக்கெட்டு எங்கள் வேலையை விட்டு விட்டு உங்களுக்காக பேசுகின்றோம்.

இந்த குவாரியில் என்னென்ன சட்ட விதிகள் மீறப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே சொன்னார்கள். நேதாஜி என்பவர். 300 மீட்டருக்குள் வீட்டு மனைகள் இருந்தால் அங்கரிக்கக் கூடாது என்பது விதி என்று கூறினார். அது மாதிரி பக்கத்தில் வீடு இருந்தால் அனுமதி தரக் கூடாது. இதனை அரசுஅதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும் . FMBல் இருக்கிறது. அதுமாதிரி கல்குளம் என்று ஒரு நீர்நிலை இருக்கிறது. நடைபாதை இருப்பதாக நீங்கள் கொடுத்த அரசு ஆவணத்தில் இருக்கிறது. நடைபாதை என்பது பிரைவேட் நிலத்தில் இருந்தாலும், நடைபாதை என்பது அரசாங்கத்திற்கு சொந்தம். அப்படி இருந்தால் விதியை மீறி கல்குவாரிக்கு

அனுமதி கொடுக்கக் கூடாது. பசுமை அரண் என்று ஒன்று உண்டு. எந்த குவாரிலேயும் பசுமை அரண் அமைக்கப்படவில்லை. ஏன் பசுமை அரண் அமைக்கப்படனும் என்றால் இந்த குவாரி நடத்துவதால் சில பாதிப்புகள் ஏற்படும் அதனால் பசுமை அரண் அமைக்கனும் என்று அரசாங்கம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் எங்குமே பசுமை அரண் அமைக்கப்படவில்லை. இங்கேயும் இதே நிலைமைதான். மின்சாரம் சம்பந்தப்பட்ட கட்டுமானங்கள் இருப்பதாக ஆவணத்தில் இருக்கிறது.

அதே மாதிரி இந்த பகுதி நிலநடுக்கத்தால் பாதிக்கப்படுவதில் இரண்டாமிடம் புவிஅதிர்ச்சி இதே மாதிரி தோண்டினால் நீங்கள் டிவியில் பார்த்திருப்பீர்கள். எத்தனையோ நிலநடுக்கத்தை பார்த்து ஆதங்கப்பட்டிருப்போம் தொடர்ந்து இந்த கல்குவாரியை ஆதரித்தோம் என்றால் நம்மை பார்த்து வெளிநாட்டில் உள்ளவர்கள் ஆதங்கப்படுவார்கள். அந்த சூழலை நாமே உருவாக்குகிறோம். சுவரொட்டியெல்லாம் ஒட்டியுள்ளோம் என்று நாலு படத்தைப் போட்டு காட்டினார்கள். எத்தனைச் சுவரொட்டி ஒட்டினீர்கள்? ஆங்கில பத்திரிக்கைக்கும், தமிழ் பத்திரிக்கைக்கும் எவ்வளவோ செலவு செய்கிறீர்கள். இந்த சுவரொட்டியை ஒரு 100 அடித்து எல்லா இடத்திலும் ஒட்டினால் தான் என்ன? மக்களுக்கு தெரிந்தால் தானே அவர்கள் கருத்து தெரிவிக்க முடியும் . எனவே விளம்பரங்கள் அதிகம் செய்ய வேண்டும்.

தோழர்கள்சொன்ன மாதிரி 40வகையான ஆவணங்களை இணைக்க வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் அதை ஏன் இணைக்கமாட்டேன் என்கிறீர்கள் என்று தெரியவில்லை. நியாயமான கல்குவாரி என்றால் இணைக்க வேண்டும் தானே. இவ்வளவு பிரச்சனை இருப்பதால்தான் எதிர்ப்பு தெரிவிக்கிறோம். இதை மீறி ரிஸ்க் எடுக்கலாமா? எதிர்கால தலைமுறைக்கு நாமே பிரச்சனையை உண்டு பண்ணலாமா? என்பது தான் எங்களுக்கு

ஆதங்கமாக இருக்கிறது. காற்று, நீர் மற்றும் மண் ஆய்வு செய்வதில் பிரச்சனை உள்ளது. இதனால் அந்த ஆய்வு அறிக்கை இல்லை.

5 லட்சம் ரூபாய் வரை CSR Fund அரசுக்கு கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் 5லட்சம் கொடுத்துட்டு இந்த ரோட்டில் பல கோடி ரூபாய் அரசாங்க பணத்தை செலவு செய்கிறார்கள். அத்தனை வாகனம் போகிறது. பாதிப்பே உங்களால் தான் வருகிறது. குவாரியால் தான் வருகிறது. சாலை அமைக்க வேண்டும்.மத்திய அரசு, மாநில அரசில் சாலை அமைக்க பல திட்டம் உள்ளது. CSR Fund 5 லட்சம் வைத்து என்ன செய்ய முடியும். அதெல்லாம்ஒரு கண்துடைப்பாக உள்ளது.

மாசு கட்டுப்பாடு வாரியமும் நீங்களும் என்ற தொழில் முனைவோருக் கையேடு மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் தொழில் முனைவோர் தவறான நிலவரங்களை தெரிந்தோ, மறைத்தோ தங்களது தகவல்களை தெரிவித்தால் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. அந்த அனுமதியை தொழில் முனைவோர் தனது சொந்த செலவில் செய்ய வேண்டும் என்று உள்ளது. எத்தனை தவறான தகவல் கொடுத்தாலும் அந்த முதலாளியை 4 குவாரிக்கு பொறுப்பேற்க வைக்க வேண்டும். அப்ப தானே தவறான தகவல்களை கொடுக்க மாட்டார்கள்.

திருஞானசம்பந்தம் குவாரிக்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஆய்வுப்பணி உட்பட்ட குவாரியை பற்றி பல பொய்யான தகவல்கள், திசை திருப்புதல் தான் இருக்கிறது. ஆவணங்களை இணையதளத்தில் ஏற்றியிருக்கிறார்கள். மாசு கட்டுப்பாடு வாரியம் இணையதளத்தில் பார்த்ததில் உண்மையை சொல்கிறோம். இருந்த இடத்தில் இருந்தே இணையத்தில் ஆவணங்களை பார்த்து தவறுகளை சுட்டிக் காட்டுகிறோம் என்று கூறினார்.

40 ஆவணங்கள்

| | |
|---|---|
| 1. | கல்குவாரி அமைக்க ஆட்சேபனை மக்களிடம் இருக்கிறதா என்று அறிவிக்கப்பட்ட A1 விளம்பரம் |
| 2. | A1 விளம்பரம் தொடர்பாக பொதுமக்கள் கருத்துக்கள் |
| 3. | A1 விளம்பரம் குறித்து பொதுமக்கள் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் அதன் மீது கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை |
| 4. | A1 விளம்பரம் குறித்து பொதுமக்கள் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் அதன் மீது வருவாய் ஆய்வாளர்அறிக்கை |
| 5. | வட்டாட்சியர் குவாரி அமையும் இடத்தின் இடப் பார்வை–புலத் தணிக்கை |
| 6. | வருவாய் கோட்டாட்சியர் குவாரி அமையும் இடத்தின் இடப் பார்வை–புலத் தணிக்கை |
| 7. | உதவி இயக்குனர் (கனிமம்) உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகளின் குவாரி அமையும் இடத்தின் இடப் பார்வை–புலத் தணிக்கை |
| 8. | குவாரி அமைவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்பதால், 10 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள அனைத்து தொழிற்சாலை விபரங்கள் எதுவும் இல்லை (மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் பெற்று இணைக்க வேண்டியது) |
| 9. | மாவட்டம் முழுக்க உள்ள கல்குவாரிகள் பட்டியல் எதுவும் இணைக்கப்படவில்லை. (ஏற்கனவே உள்ள கல் குவாரிகளால் என்னென்ன பாதிப்புகள் என அறிய) |
| 10. | தற்போது 500 மீட்டர் சுற்றளவில் இயங்கி கொண்டுள்ள –இயங்கி மூடப்பட்ட அனைத்து கல்குவாரிகளின் சுரங்க திட்டம் மற்றும் அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் கொடுக்கப்பட்ட செயல்முறை ஆணை |
| 11. | தற்போது 500 மீட்டர் சுற்றளவில் இயங்கி கொண்டுள்ள –இயங்கி மூடப்பட்ட அனைத்து கல்குவாரிகளின் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமத்தால் கொடுக்கப்பட்ட Terms of Reference மற்றும் சுற்றுச்சூழல் அனுமதி (EC) |
| 12. | நிலத்தடி நீர் பற்றிய அறிக்கை. ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் பாதிப்பு உள்ளாகும் கிணறுகள் பற்றிய ஆய்வு முழுமையான |

| | |
|---|---|
| | விபரங்கள் |
| 13. | ஏற்கனவே கல்குவாரி இயங்கிய work permit letterஇல்லை |
| 14. | வனத்துறை அலுவலரின் கடிதம் |
| 15. | தொல்லியல் மற்றும் அறநிலையத் துறையின் கடிதம் |
| 16. | பொதுப்பணித்துறை கடிதம் |
| 17. | நிலத்தடி நீர் தொடர்பாக கண்காணிக்கும் அமைப்புகளின் கடிதம் |
| 18. | மின்சாரத் துறையிடம் பெற்ற கடிதம் |
| 19. | Regional Controller of Mines கடிதம் |
| 20. | மூன்று மாத காலம் ஆய்வு செய்யப்பட்டதாக சொல்லப்படும் காற்று, ஒலி, மண்,நீர் பரிசோதனை முடிவுகள் அடங்கிய ஆய்வக ரிப்போர்ட் |
| 21. | குடிநீர் வடிகால் வாரிய கடிதம் |
| 22. | ஊர் நத்தம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் இல்லை என்று தெரிவிக்கும் வட்டார வளர்ச்சி அலுவலர் கடிதம் |
| 23. | அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் இல்லை என்று தெரிவிக்கும் டிடிசிபி கடிதம் |
| 24. | குவாரி அமைக்கும் நிறுவனத்தினர், வருமானவரித்துறையிடம் பெற்ற கடிதம் |
| 25. | குவாரி அமைக்கும் புலத்தைச் சுற்றி உள்ள சாலைகள், எந்த வகையான சாலைகள், அதில் எவ்வளவு எடை உள்ள வாகனங்கள் செல்ல வேண்டும் என்ற நெடுஞ்சாலைத்துறை மற்றும் ஊராட்சி ஒன்றிய பொறியாளரிடம் பெற்ற கடிதம் |
| 26. | கல் குவாரிகளில் வரும் வாகனங்களில் ஏற்படும் நச்சுக் கழிவுகளை, எங்கே கொண்டு சென்று சுத்திகரிப்பார்கள் என்ற நிறுவனத்தோடுபோட்டுள்ள ஒப்பந்த விபரம் |
| 27. | ஏற்கனவே 500 மீட்டர் சுற்றளவில் இயங்கி முடித்து மூடப்பட்ட கல்குவாரியின் செயல்முறை ஆணை நகல் |
| 28. | ஏற்கனவே 500 மீட்டர் சுற்றளவில் இயங்கி முடித்து மூடப்பட்ட கல்குவாரியின் அனைத்து துறையினர் கொடுத்த ஆவணங்கள் |
| 29. | ஏற்கனவே 500 மீட்டர் சுற்றளவில் இயங்கி முடித்து மூடப்பட்ட கிரானைட் கல்குவாரியின், இறுதிக்குழி பரிமாண அடிப்படையில், எடுக்கப்பட்டு உள்ளதா என்பதற்காக துறையிடம் பெற்ற சான்றிதழ் |
| 30. | உதவி இயக்குனர் (கனிமம்) வழங்கிய அங்கீகரிக்கப்பட்ட சுரங்கத் |

| | |
|---|---|
| | திட்டம் (Mining Plan) |
| 31. | கல் குவாரிக்கும், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுமம் உறுப்பினர் செயலர் கொடுத்த Terms of Reference (TOR) கடிதம் |
| 32. | கல் குவாரிக்கும், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுமம் உறுப்பினர் செயலர் கொடுத்த Terms of Reference (TOR) கடித அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட ஒப்பீட்டு பட்டியல் |
| 33. | அரசு விதிகளின் (Criteria) அடிப்படையில், கல்குவாரி அமையும் இடத்திலிருந்து 300 மீட்டர் தூரத்திற்குள் வீடுகள்-கட்டிடங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள், 50 மீட்டர் தூரத்திற்குள் ஓடை, உயர்/தாழ் மின்சாரம் செல்லும் கம்பிகள், மயானம், சாலைகள், இரயில்வே இருப்புப்பாதை மற்றும் பெட்ரோலிய லைன்கள், 10 மீட்டர் தூரத்திற்குள் பாதை மற்றும் கிராம சாலைகள், 500 மீட்டர் தூரத்திற்குள் தொல்லியல் மற்றும் வரலாற்றுச் சின்னங்கள், ஒரு கிலோமீட்டர் சுற்றளவிற்குள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி (Reserve Forest), 500 மீட்டர் தூரத்திற்குள் உள்ளாட்சி அமைப்புகள் அல்லது குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் நீரேற்றும் அமைப்புகள மற்றும் வடிமுனை கிணறு, குடிநீர் திட்டங்கள், பாலம் ஆகியவை இல்லை என உறுதிப்படுத்தி கூறும் கிராம நிர்வாக அலுவலரின் சான்று அறிக்கை |
| 34. | குவாரி அமையும் இடம் தொடர்பான புல வரைபடம், பதிவேடு விபரங்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்ற அடங்கல் விபரங்கள் |
| 35. | திட்டத் தயாரிப்பாளரின் சான்றிதழ் |
| 36. | வெடிமருந்து சப்ளை செய்யும் நிறுவனங்களோடு போட்டுள்ள ஒப்பந்த கடிதம் |
| 37. | 500 மீட்டர் சுற்றளவில் உள்ள குவாரிகள் பற்றிய உதவி இயக்குனர் (கனிமம்) கடிதம் |
| 38. | குவாரி அமைப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவரின் குறிப்பாணை |
| 39. | குவாரி உரிமையாளரின் சத்திய பிரமாண வாக்குமூலம் |
| 40. | குவாரியின் இருப்பிடத்தை காட்டும் படங்கள் |

மாசு கட்டுப்பாடு வாரியம் இணையதளத்தில் இணைப்புகள் ஏற்றப்படாத காரணத்தால் நாங்கள் புகார் கொடுத்து திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கடந்த டிசம்பர் மாதம் 2022 திருப்பூர் தெற்கு மாசு கட்டுப்பாடு வாரியம் நடத்திய மடத்துக்குளம் மையவாடி கல்குவாரி கருத்து கேட்பு கூட்டத்தை ரத்து செய்தார். இப்ப இதையெல்லாம் ஏற்றவில்லையென்று நாங்கள் திங்கள் கிழமை ஒரு மனு கொடுத்தோம். ஆனால் என்ன நடவடிக்கை என்று தான் தெரியவில்லை.

இதை இங்கே மட்டும் பேசவில்லை. முன்னரே எதிர்த்து கலெக்டரிடம் கொடுத்தோம். கோவை தெற்கு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பில் கடந்த ஆண்டு நடந்த கச்சாபாளையம், அரசபாளையம், மணிகண்டன் மற்றும் பரமசிவம் கல்குவாரிக்கு 1100 பக்கங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து நடத்தினர். இதற்கு முன் உதாரணம் உண்டு. நாம் பேசவில்லையயென்றால் யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள்.

40 வகையான ஆவணங்கள் இல்லாததால் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மனு கொடுத்தும் ஏற்றாததால் கடந்த 16.06.2023 அன்று போராட்டம் நடத்தியுள்ளனர். நிறைய இடங்களில் கல்குவாரி நடத்த வேண்டாம் என்று சொல்லவில்லை. மக்களின் தேவைக்களுக்காக குறைந்தபட்சமாக நடத்துங்கள்.100க்கு 99% விதிமீறல் இருப்பதால் தான் நாங்கள் எங்கள் வேலையை விட்டு மக்களுக்காக கருத்து தெரிவிப்பதற்காக வருகிறோம். நாங்கள் கூறிய கருத்தை உள்வாங்கி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருஞானசம்பந்தம் கல்குவாரிக்கான அனுமதியை தடை செய்ய வேண்டும் என்று கூறினார்.

6.திரு. கண்ணன், வாடிப்பட்டி

நான் 15 ஆண்டுகாலமாக இந்த குவாரியில் வேலை பார்த்து வருகிறேன். குவாரியில் வேலை பார்த்து தான் என் பிள்ளைகளை படிக்க வைத்தேன். எனக்கு 3 மகன்கள் ஒரு மகன் இன்ஜினியர்க்கு படிக்க வைத்துள்ளேன். இன்னொருவர் BCA படித்துள்ளார். ஒருவர் AC மெக்கானிக்காக உள்ளார். இன்ஜினியர் முடித்தவர் வேலைக்கு போனால் 10,000ம் தருகிறார்கள். 10,000க் மேல வேலை கிடைக்கவில்லை. இந்த கிரசரில் தான் வேலை பார்க்கிறான். இருக்கிற தொழிலை எல்லாம் நிறுத்தி விட்டால் நாங்கள் என்ன வேலை பார்க்கிறது. கல்குவாரி தான் இங்கு இருக்கிற 15 கிராமத்திற்கு முக்கியமான தொழிலாக இருக்கிறது. 2, 3 வருடத்திற்கு முன்னால் சுத்தமாக மழை இல்லை. அப்பொழுது இந்த கல்குவாரி கிரசரில் வேலை பார்த்து தான் ஒரு 10 கிராமங்கள் நல்லபடியாக வாழ்ந்து வந்தது. இந்த தொழிலை நிறுத்தியதால், ஏற்கனவே கல், மண் எதுவுமே கிடைக்கவில்லை. இந்த குவாரியையும் நிறுத்தினால் நாளை நாம் வீடு கட்டுவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். எனவே இந்த தொழிலை நடத்துவதற்கு அனுமதி அளிக்குமாறு கூறினார்.

7.திரு. விவேக், மக்கள் பாதை அமைப்பு, ஒருங்கிணைப்பாளர்

மேலூர் பகுதியில் பல குவாரிகளை முறைப்படுத்தி பல மலை வளங்களை பாதுகாத்த திரு. சகாயம் IAS அவர்கள் தொடங்கிய மக்கள் பாதை அமைப்பின் மதுரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர். வாழ்வதாரம் என்ற விஷயம் பற்றி பேசினார்கள். இதைப்பற்றி பேச வேண்டாம் என்று நினைத்தேன். ஆனால் வேறு வழியில்லை. இந்த கூட்டத்தில் சொல்லியாக வேண்டும் என்பதால் பேசுகிறேன்.

அண்ணன் பேசும் பொழுது கூறினார். கல்குவாரியில் வேலை பார்த்து தான் அந்த வருமானத்தில் தான், பிள்ளைகளை படிக்க வைத்தேன் என்று. அது மிக்க மகிழ்ச்சி அவர் உழைத்து பிள்ளைகளை படிக்க வைத்துள்ளார். அதை நாங்கள் வரவேற்கிறோம். இதில் மாற்று கருத்து இல்லை. மீண்டும் மீண்டும் நாங்கள் சொல்கிற விஷயம் ஒன்றே ஒன்றுதான். ஒரு கல்குவாரி ஆரம்பித்தால் அதற்கு சில அனுமதிகள் வழங்கப்பட வேண்டும். முறைப்படி செய்ய வேண்டும் என்றுதான் சொல்கிறோம்.

அதை நாங்கள் நிறுத்த சொல்லவில்லை. அடைக்க சொல்லவில்லை. இதை தெளிவாக புரிந்து கொள்ளுங்கள். சகோதரி பேசும்பொழுது கூறினார். வாழ்வாதாரத்தை நிறுத்தி விட்டால் நாங்கள் என்ன செய்வது என்று சொன்னார். அதற்கான விளக்கமும் தோழர் சொன்னார். 40 வகையான ஆவணங்கள் பற்றி தோழர் சொன்னார். எங்களைப் போன்ற ஆட்களிடம் கேட்டால் நாங்கள் விளக்கம் கொடுக்க தயாராக உள்ளோம். அதற்கு என்னென்ன ஆவணம் தேவை. அரசிடம் எந்தெந்த அனுமதி வாங்க வேண்டும். எங்களுக்கும் பக்கத்தில் கல்குவாரி இருக்கிறது. இந்த பிரச்சனையும் நாங்கள் எதிர் கொண்டு இருக்கிறோம்.

நானும் ஒரு படித்த பட்டதாரி, நான் ஒரு வழக்கறிஞரின் பிள்ளை. என் தந்தையாரும் இதே உசிலம்பட்டி பகுதியில் பல வழக்குகளுக்காக வந்திருக்கிறார். மனித குலத்திற்கு எதிரான சில பிரச்சனைகளைப் பற்றி பேசுகிறோம். நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு சில வார்த்தைகளை கூறினீர்கள். அந்த வார்த்தையே திரும்ப பெற வேண்டும். இங்கு இருக்கும் படித்த அதிகாரிகள், அரசு அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர் ஒரு அப்பாவி பொது ஜனத்தை உட்கார வைத்து அவர்களுக்கு ஆதரவாக பேச வைப்பது எந்த விதத்தில் முறையாகும் என்று எனக்குத் தெரியவில்லை. இதைப்பற்றி தெரிந்த, விளக்கம் அறிந்த மக்களிடம், விழிப்புணர்வு கொடுக்க வைத்து,

அனுமதி கொடுக்க வைத்தால், அதன் பிறகு நாங்கள் முன்நின்று, ரிப்பன் வெட்டி ஆரம்பித்து கொடுக்கிறோம்.

எந்த விழிப்புணர்வே இல்லாத மக்களை முட்டாளாக்க கூடாது. இதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். குவாரி எத்தனையோ தொழில் செய்கிறீர்கள். இந்த பணத்தை வைத்து தண்ணீரை வாங்க முடியுமா. குடிக்கும் ஒரு டம்ளர் தண்ணீரை உருவாக்க முடியுமா? ஒரு தண்ணீரை இன்னொரு தண்ணீராக மாற்ற முடியும். உப்பு தண்ணீரை நல்ல தண்ணீராக்க மெஷின் வைத்துள்ளார்கள். ஒரு மலையை உருவாக்க முடியுமா?

ஒரு சென்டி மீட்டர் அளவு மலையை உருவாக்க முடியுமா? ஒரு மாட்டு வண்டி அளவு மணல் உருவாவதற்கு எவ்வளவு காலம் ஆகும் தெரியுமா? இந்த பாட்டி அளவு வாழ்க்கையை நான் வாழ்வேனா என்று தெரியவில்லை. இங்கு காற்று மாசுபட்டு விட்டது. நீர் மாசுபட்டுவிட்டது. இவ்வளவு மாசுகளை தடுப்பதற்காக தான் இவ்வளவு போராடி கொண்டு இருக்கிறோம்.

இந்த மக்களுக்கான விழிப்புணர்வு இல்லாமல் அவர்களிடம் கருத்து கேட்டு, அவர்கள் இதற்கான அனுமதி வாங்கிவிட்டோம் என்று சொல்வது எந்த வகையில் முறையாக இருக்கும் என்று அரசு ஊழியர்கள் தான் எனக்கு சொல்ல வேண்டும். நாங்கள் ஒரு கருத்து சொல்கிறோம். அவர்கள் ஒரு கருத்து சொல்கிறார்கள். இதைப்பற்றிய முழு விழிப்புணர்வு எனக்கு இல்லை என்று சொல்கிறார்கள். விழிப்புணர்வு இல்லாதவர்களிடம் கருத்து கேட்பது எந்த விதத்தில் சரியாக இருக்கும் என்று தெரியவில்லை.

நான் நீங்கள் எல்லோரும் என்ன பேசுகீறர்கள் என்று கேட்க தான் வந்தேன். ஆனால் என்னால் அமர்ந்து இருக்க முடியவில்லை. இந்த விவசாயமும், இந்த இயற்கை வளமும் விலை மதிப்பற்றது. நீங்கள் கோடி

ரூபாய் சம்பாதிக்கலாம். BCA படிக்கலாம். MCA படிக்கலாம் Doctor ஆகலாம். இன்ஜினியர் ஆகலாம். ஆனால் சோறு கிடைக்காது. தண்ணீர் கிடைக்காமல் போய்விடும், விவசாயத்திற்கு நிலம் இல்லாமல் போய்விடும். இப்பவும் சொல்கிறோம் நாங்கள் குவாரிக்கு எதிரானவர்கள் இல்லை. குவாரிகளை முறைப்படுத்துங்கள் என்று சொல்கிறோம். சட்டப்படி நடத்துங்கள் என்று சொல்கிறோம். அதில் உங்களுக்கு சில சிரமங்கள் இருக்கலாம். ஆனால் அதைப் பொறுத்துக் கொண்டு, அதற்கு செலவு செய்து, அதை முறைப்படுத்தி செய்யுங்கள் என்று கூறினார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மதுரை</u>

அடுத்து பேச விரும்புபவர்கள் சுருக்கமாக பேசுங்கள். இல்லையென்றால் நிறைவு செய்து கொள்ளலாம் என்று கூறினார்.

<u>8.திரு. ஆண்டிச்சாமி, வீரம்பட்டி</u>

நான் கல்குவாரியில் ஊழியராக உள்ளேன். கல் உடைத்து தான் இப்பொழுது வரை பிள்ளைகளை படிக்க வைத்தேன். கல் தொழிலை வைத்துதான் கல்வியறிவு இல்லாதவர்களுக்கும் கல்வியறிவு கொடுக்கிறார்கள். இன்சூரன்ஸ் கொடுக்கிறார்கள். 2 வேளை சாப்பாடு போடுகிறார்கள். எங்கள் பிள்ளைகளை M.A. வரை படிக்க வைத்துள்ளோம். இந்த தொழில் இருப்பதால் தான் படிக்க வைத்துள்ளோம். அதனால் அனுமதி கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

**9.திரு. பிரபாகரன், மானாமதுரை**

12வது வரை தான் படித்துள்ளேன். நான் 10 வருடமாக இந்த குவாரியில்தான் வேலை பார்க்கிறேன். என் தாய் தகப்பனை காப்பாற்றுகிறேன். இதனால் விவசாய நிலத்திற்கு பாதிப்பு கிடையாது. இந்த நிலத்தில் பாறை இருப்பதால் தான் கல்குவாரியை அமைக்கிறார்கள். இதற்கும் விவசாயத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பாதிப்பும் இல்லை. எனவே குவாரி நடத்த அனுமதி தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என கூறினார்.

**10.திரு. ஆனந்த கணேசன், செக்கானூரணி**

இந்த குவாரியை வைத்து 150 குடும்பங்கள் வாழ்வதாரம் அடைந்துள்ளனர். அதனால் குவாரிக்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

**11.திரு. வெள்ளைச்சாமி, கீழக்கோட்டை**

நான் இந்த கிரஷரில் 4 வருடமாக தங்கி வேலை பார்க்கிறேன். என் அப்பா அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை. நான் 12வது வரை தான் படித்துள்ளேன். குவாரி மூலமாக தான் அம்மா அப்பாவை காப்பாற்றுகிறேன். தம்பியை படிக்க வைக்கிறேன். இந்த குவாரியை கொண்டு வர வேண்டும் என்று கூறினார்.

**12.திரு. துரைப்பாண்டி, மாயக்குரும்பன்பட்டி**

நான் 15 வருடமாக இந்த குவாரியில் தான் வேலை பார்த்து வருகிறேன். இந்த வேலையை விட்டால் வேறு வேலை தெரியாது. எனவே மீண்டும் அனுமதி தர வேண்டும் என்று கூறினார்.

13.திரு. எஸ். பொன்னையா, ஜே. ஆலங்குளம்

20 வருடமாக குவாரியில் வேலை பார்க்கிறேன். குவாரி வேலை பார்த்து தான் பிள்ளைகளை படிக்க வைத்தேன். எனவே இந்த குவாரிக்கு அனுமதி தர வேண்டும் என்று கூறினார்.

14.திரு. கோதைராஜ், முத்துகிருஷ்ணாபுரம்

நான் 20 வருடமாக வேலை பார்க்கிறேன். என் பிள்ளைகளை வளர்க்கிறேன். எனவே குவாரிக்கு அனுமதி தர வேண்டும் என்று கூறினார்.

15.திரு. ராஜாங்கம், மேல உடைப்பு

15 குடும்பத்திற்கு வேலை கொடுத்துள்ளார். அவர்க்கு நாங்கள் நன்றி சொல்கிறோம். நாங்கள் அன்றாடம் உழைத்து கூலி வேலை செய்து வருகிறோம், குவாரியை நம்பிதான் வாழ்கிறோம். 10, 15 வருடமாக வேலை பார்க்கிறோம். எனவே குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கூறினார்.

16.திருமதி. வசந்தி, சொறிக்காம்பட்டி

என் மகன் இந்த கம்பெனியில் வேலை பார்க்கிறான். இதனால் பாதிப்பில்லை அனுமதி கொடுங்கள் என்று கூறினார்.

17.திருமதி. விமலா, சொறிக்காம்பட்டி

என் கணவர் கிரஷரில் தான் வேலை பார்க்கிறார். கட்டாயம் கிரஷர் வேண்டும். கிரஷர் இருந்தால் தான் எங்கள் பிழைப்பு நடக்கும். நாங்கள் 2

பெண் குழந்தைகளை வைத்து கஷ்டபடுகிறோம். கிரஷர் இருந்தால் தான் பிள்ளைகளை படிக்க வைக்க முடியும் என்று கூறினார்.

18.திரு. பாண்டி. பொன்னமங்கலம்

நாங்கள் 20 குடும்பம் அங்கு தான் வேலை பார்க்கிறோம். எனவே குவாரிக்கு அனுமதி வேண்டும் என கூறினார்.

19.திரு. A. முருகன், ஜே. ஆலங்குளம்

எனக்கு 3 பிள்ளைகள். ஒரு பிள்ளை நர்ஸ் படிக்கிறார். 2 பிள்ளைகள் பள்ளியில் படிக்கிறார்கள். நான் கல்குவாரியில் தான் 13 வருடமாக வேலை பார்க்கிறேன். எனவே கல்குவாரிக்கு அனுமதி தாருங்கள் என கூறினார்.

20. திரு. குமார், ஜராவதநல்லூர்

தமிழக அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு இந்த குவாரி நடத்தப்படுகிறது. நாங்கள் இத்திட்டத்தை வரவேற்கிறோம் என்று கூறினார்.

21.திரு. யுவராஜ், அனுப்பானடி

நான் இந்த நிறுவனத்தில் டிரைவராக வேலை பார்க்கிறேன். என்னைப்போல 25 பேர்க்கு மேல் இந்த நிறுவனத்தில் நேரடியாகவும், மறைமுகமாகவும் மெக்கானிக் லேத் வேலை பார்க்கிறார்கள். எனவே இத்திட்டத்தை வரவேற்கிறேன் என்று கூறினார்

**22.திரு. நேதாஜி, உசிலம்பட்டி, தமிழக விவசாய பாதுகாப்பு சங்கம், மாநில துணை பொது செயலாளர், மதுரை**

சமூக ஊடகம் ஆராய்ச்சியாளரின் ஆய்வறிக்கை வீடியோ இருக்கிறது. அந்த வீடியோவை பார்த்தீர்கள் என்றால் தெரியும். 2040 ல் 1லிட்டர் தண்ணீர்க்கு 8 பேர் சண்டையிடும் நிலை ஏற்படும் அடிகுழாயில் அடித்து சண்டை பிடித்தது இன்று இல்லை என்று எங்கிருந்தோ வரும் தண்ணீரை சண்டையிட்டு பிடிக்கிறோம்.

தண்ணீரில்லாமல் வாழ முடியாது. கல் இல்லாமல் இருக்கலாம் வேலை இல்லாமல் இருக்கலாம். சோறும் தண்ணீர் இருந்தால் வீட்டிற்குள் முடங்கி படுத்துக் கொள்ளலாம். இது தான் முக்கியம் என்று போராடுகிறோம். மாவட்ட ஆட்சியர் சட்டத்திற்கு புறம்பான இந்த திட்டத்திற்கு அனுமதி மறுக்க வேண்டும் என்று கூறினார்.

**23. காராமணி, உசிலம்பட்டி**

முதலாளி ஒரு 10 பேரை கூப்பிட்டு வந்து கல்குவாரிக்கு அனுமதி வேண்டும் என்கிறார்கள். அந்த 10 பேரும் இந்த மாவட்டத்தை சேர்ந்தவர்கள் அல்ல. எங்கள் ஊர் மக்களுக்கு வாழ்வாதாரம் விவசாயம். ஒரு 1000 பேர் வேலை பார்க்கிற மாதிரி மில்லைக் கட்டிக் கொடுங்கள். பெண்கள் எல்லாம் வேலை பார்க்கட்டும். எத்தனை கல்குவாரி வேண்டும் என்றாலும் வைத்துக் கொள்ளட்டும்.

48 பேர் பிழைப்பதற்கு திருமங்கலத்தில் உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட வேண்டுமா.? கல்குவாரி நடத்துபவர்கள் மிகப்பெரிய மில்லை கட்டுங்கள். எங்கள் ஊர் விவசாயிகள் அந்த மில்லில் வேலை பார்த்து சாப்பாட்டிற்கு வழி செய்து கொள்ளட்டும். அப்புறம் நீங்கள் எத்தனை

கல்குவாரிக்கும் அனுமதி கொடுங்கள். 40 வகை ஆவணங்கள் என்பது உங்களைப் போன்ற அதிகாரிகளால் யோசித்து எழுதப்பட்டவை. 40 ஆவணங்களை சரி செய்யுங்கள்.

காலையில் எழுந்து 10 கிலோ பூவை எடுத்து கொடுத்துள்ளேன். இங்கே வந்து விவசாயி சாக போகிறானே என்று பேசுகிறோம். விழிப்புணர்வு இல்லாமல் இன்னும் இந்த விவசாயிகள் இருக்கிறார்களே. இவர்கள் நிலைமை என்ன?

கடலாடியில் இருந்து எங்கள் ஊரில் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கிறார்கள். வசதி வாய்ப்பு இல்லாமல் தான் எங்கள் ஊர்ப்பக்கம் அவர்கள் ஆடு மேய்கிறார்கள். இந்த குவாரிக்கு நீங்கள் லைசென்ஸ் குடுத்தீர்களானால் ஆடு மேய்ப்பவருடன் நாங்களும் வேறு ஊருக்குச் சென்று பிழைக்க வேண்டும். இந்த பணம் ஆடு வாங்கக்கூட பத்தாது.

PWD அதிகாரி வந்திருக்கிறாரா இங்கே? வரவில்லை. 2 கி.மீ தூரத்தில் ஒரு பாலத்தைக் கட்டி, அதில் வைகை டேமில் இருந்து மேட்டுப் பகுதியில் தண்ணீரைக் கொண்டு வந்து உசிலம்பட்டி தொகுதி முழுக்க பாய்ந்து கொண்டிருக்கிறது. பாலத்தை பாதுகாக்காமல், 300 அடியில், 100மீட்டரில் குவாரியை வைத்து வெடி வெடிக்கிறார்கள். பாலம் உடைந்தால் தண்ணீர் வராது. அரசாங்கம் ஒரு பொய்திட்டத்தை போட்டு வைகை டேமில் 71 அடியில் 68 அடியில் அந்த மடையை வைத்து நாடே அழியும் அளவு மழை பெய்தால் தான் அதில் தண்ணீர் வருகிறது. கனிம வளத்துறை 200 அடியில் அனுமதி கொடுத்துள்ளது. மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் அனுமதி கொடுத்துள்ளனர். ஒரு குவாரி என்பது 1.5 கி.மீ ல் இருக்க வேண்டும். அருகே ரோடு மற்றும் தண்ணீர் தொட்டி இருக்கக் கூடாது. குவாரி இருக்குமிடம் 1.5 கி.மீ தள்ளி இருக்க வேண்டும்.

சகோதரி சொன்னார்கள். குவாரி பக்கத்திலேயே குடிசை என்று. அந்த குடிசைக்கு வீட்டுவரி உண்டா? தற்காலிகமாக எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். நிரந்தரமான வாழ்வாதாரம் விவசாயம் மட்டுமே. நெல் விளைந்தால் தான் நீங்களும், நாங்களும் சாப்பிட முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு இந்த கல்குவாரி அனுமதியை மறுக்க வேண்டும் என்று கூறினார்

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மதுரை**

தி/ள்.பி.திருஞானசம்பந்தம் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி குறித்து தாங்கள் கூறியுள்ள அனைத்து கருத்துக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை பொறுமையாக இருந்து இந்த கூட்டத்தை சிறப்பாக நடத்தி கொடுத்த அனைவருக்கும் நன்றி என கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
மதுரை

வருவாய் கோட்டாட்சியர்
திருமங்கலம்
மதுரை

இணைப்பு:

1. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)

2. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல். (மொத்த பக்கம் 14 மற்றும் 146 நபர்கள்)

3, பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்.

4.திட்டத்தை பற்றி பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.